# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பெரும்போரை அஞ்சாது வெற்றி கொண்ட இளம் மன்னன்

அ) முதுகுடுமிப்பெருவழுதி ☐ ஆ) பெருஞ்சேரலாதன் ☐

இ) நெடுஞ்செழியன் ☐ ஈ) செங்குட்டுவன் ☐

2. சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள்

அ) எ,யா ☐ ஆ) யா,ஓ ☐

இ) எ,ஏ ☐ ஈ) ஆ,ஓ ☐

3. கி.பி 6 - 9 ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்டவர்

அ) பாண்டியர் ☐ ஆ) பல்லவர் ☐

இ) சோழர் ☐ ஈ) சேரர் ☐

4. தலை வணங்கினான் என்பது

அ) வேற்றுமைத்தொகை ☐ ஆ) உம்மைத்தொகை ☐

இ) பண்புத்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐

5. 'அணுவைச் சதகூறிட்ட கோணிலும் உள்ளான்' எனக் கூறியவர்

அ) இரணியன் ☐ ஆ) ஔவையார் ☐

இ) இந்திரசித்து ☐ ஈ) பிரகலாதன் ☐

6. மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு

அ) உப்பு ☐ ஆ) மூழ்கு ☐

இ) கன்று ☐ ஈ) கயிறு ☐

19. மாமரம் நன்றாகப் பூத்துக் குலுங்கும். ____________ அத்தனை பூக்களும் கனியாவதில்லை.

அ) ஆனால் ஆ) எனவே

இ) ஆகையால் ஈ) ஏனென்றால்

20. நன்னூலை எழுதியவர்

அ) பவணந்தி ஆ) தொல்காப்பியர்

இ) அகத்தியர் ஈ) ஆறுமுகநாவலர்

21. “மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்வது” என்ற அடி இடம்பெற்ற நூல்

அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம்

இ) மணிமேகலை ஈ) வளையாபதி

22. கவிஞன் தான் காணுகின்ற ஒரு காட்சியைத் தன் கற்பனை ஒன்றுடன் இணைத்துக் கூறுவது

அ) உயர்வுநவிற்சிஅணி ஆ) உருவகஅணி

இ) உவமைஅணி ஈ) தற்குறிப்பேற்றஅணி

23. குகைப்புலி என்பது

அ) 3 ஆம் வேற்றுமைத்தொகை

ஆ) 4 ஆம் வேற்றுமைத்தொகை

இ) 5 ஆம் வேற்றுமைத்தொகை

ஈ) 7 ஆம் வேற்றுமைத்தொகை

24. ஐம்படைத்தாலியில் உள்ள படைக்கருவிகளில் ஒன்று

அ) கத்தி ஆ) சங்கு

இ) ஈட்டி ஈ) கோடரி

25. ஆங்கிலேயர் தமிழ், சிங்களப் பகுதிகளை ஒன்றிணைத்த ஆண்டு

அ) 1948 ☐ ஆ) 1977 ☐

இ) 1833 ☐ ஈ) 1972 ☐

26. உலகம் தன்னைத்தானே சுற்றுகிறது என்று வள்ளுவர் கூறினார். இது

அ) தனிச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐

இ) ஏவற்சொல்லியம் ☐ ஈ) கூட்டுச்சொல்லியம் ☐

27. வினைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) இரவுபகல் ☐ ஆ) மழைக்கை ☐

இ) வட்டக்கல் ☐ ஈ) வளர்மதி ☐

28. நிலமும் பொழுதும்

அ) உரிப்பொருள் ☐ ஆ) கனிப்பொருள் ☐

இ) கருப்பொருள் ☐ ஈ) முதற்பொருள் ☐

29. நண்டு வாழும் இடம்

அ) வளை ☐ ஆ) குகை ☐

இ) பட்டி ☐ ஈ) பொந்து ☐

30. பண்டைய சேரத்தமிழரசு இன்று __________ என அழைக்கப்படுகிறது.

அ) தமிழகம் ☐ ஆ) கன்னடம் ☐

இ) ஆந்திரா ☐ ஈ) கேரளம் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் இலக்கியத்தின் கழககால இலக்கியங்கள் பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்க்கையை நுணுக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவை எழுந்த காலத்தின் எல்லாப் பகுதிகளையும் முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவை. இலக்கியம் பழமை தந்த ஒப்பற்ற கொடையாகும். அதுமட்டுமன்றி ஓர் இன வரலாற்றின் அகத்தியமான சான்றாகவும் அமைகின்றது. இலக்கியச் சான்றுகள் ஒவ்வொரு இன மக்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றி நிற்கின்றன. பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளைக் கண்டறியும் வாய்ப்பைக் கழக இலக்கியங்கள் எமக்கு அளித்துள்ளன. எனவே பண்டை இலக்கியங்களை நாம் கற்பதன் மூலம் எம் முன்னோர் விட்டுச் சென்ற வாழ்வியல் பண்புகளையும் சிறப்புகளையும் அறிவதுடன் இளையோருக்கும் கடத்திச் செல்வதனூடாக எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியும். மாணவர்களின் மொழியாற்றலை விருத்தி செய்துகொள்ள இலக்கியங்களில் அமைந்துள்ள செய்யுள்களை இலகு நடையில் பயிற்றுவித்தலே அவர்களைச் சென்றடைவதற்கான சிறந்த வழிமுறைகளில் ஒன்றாகும். அறிவியல், மரபுமுறை, கலை, விளையாட்டு, உணவு, ஆடை, கொண்டாட்டம் போன்றவை இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

1. மாணவர்களின் மொழியாற்றலை விருத்தி செய்து கொள்ள சிறந்த வழிமுறை எது?

---

---

2. ஒவ்வொரு இன மக்களின் பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றி நிற்பவை எவை?

---

---

3. கழககால இலக்கியங்கள் எதனைப் படம்பிடித்துக் காட்டுகின்றன?

---

---

4. இலக்கியங்களினூடாக எவை வெளிப்படுத்தப்படுகின்றன?

---

---

5. எமது பண்பாட்டு விழுமியங்களை எவ்வாறு பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியும்?

---

---

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழர் ஏன் சிந்துவெளி நோக்கிப் புலம் பெயர்ந்தனர்?

2. கி.பி 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழீழ அரசுகள் வீழ்ச்சியுற்றமைக்கான கரணியம் யாது?

3. விண்ணுந்து பற்றிக் கூறும் இலக்கியங்கள் இரண்டு தருக.

4. "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணி.... "என்ற பாடல் யாரால், யார் மீது பாடப்பட்டது?

5. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உமக்குப் பிடித்த குறள் ஒன்றைத் தருக.

6. கரிகாற்பெருவளத்தானும் பெருஞ்சேரலாதனும் போர் புரிந்த இடம் எது?

7. திருவாசகம் யாரால் எழுதப்பட்டது?

புள்ளிகள் 10

4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.

1.




2. தொடர்ந்து துன்பம் வந்தாலும்
துணிந்து நிற்போம் வீழமாட்டோம்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

பலத்த காற்று வீசியதால் பனைமரங்கள் சரசரத்து ஆடின. அவ்வேளை திடீரென காற்றுடன் பெருமழை பொழிந்தது. ஆறுகளும் குளங்களும் நீரால் நிரம்பி வழிந்தன. வாய்க்கால்களின் வழியே மழைநீர் சலசலத்து ஓடி வயலுக்கு வளம் பெருக்கியது. நாற்று நடும் பெண்களின் பாட்டொலி இனிமையாகக் காற்றில் மிதந்து வந்தது. அதைக் கேட்டு மகிழ்ந்தவாறு ஆண்கள் காலநேரம் பாராது சுறுசுறுப்பாக வேலை செய்தனர். ஊர்க்கோவிலின் திருவிழா நெருங்கி வருவதால் வீடுகள் கலகலப்பாக இருந்தன. மக்கள் கோவிலுக்கும் சுற்றுப்புற மதில்களுக்கும் வெள்ளை அடித்தனர். விழாத் தொடங்கிய அந்நாளில் பொழுது புலரும்போதே பெண்கள் துயிலெழுந்து மஞ்சள் பூசி நீராடி கோவிலுக்குச் சென்றனர்.

1. குணவாகு பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

2. நெல்லின் இளமைப் பெயர் என்ன?

______________________________________________

3. அஃறிணைப் பன்மை வினைச்சொற்கள் இரண்டு தருக.

______________________________________________

4. வன்றொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

5. இறந்தகால வினையெச்சம் ஒன்று தருக.

______________________________________________

6. வீடுகள் கலகலப்பாக இருந்தன. இது எவ்வகை ஆகுபெயர்?

______________________________________________

7. பாட்டொலி என்பதைப் பிரித்து எழுதுக.

______________________________________________

8. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

9. காலநேரம் என்பது எவ்வகைத்தொகை?

______________________________________________

10. நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் வேற்றுமைத் தொகையிலுள்ள வேற்றுமை உருபுகளையும் அவை எத்தனையாம் வேற்றுமை என்பதையும் கண்டறிந்து எழுதுக.**

| | **உருபு** | **வேற்றுமை** |
|---|---|---|
| கல்லெறிந்தார் | | |
| வாள் எடுத்தான் | | |
| காற்சங்கிலி | | |

புள்ளிகள் 03

**2. பின்வரும் உவமை அணிகளின் உவமானம் உவமேயம் என்பவற்றைத் தருக.**

கயல்விழி ______________________________

கடலறிவு ______________________________

புள்ளிகள் 02

6) **தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

அறியுமா உப்பிட்டவரை நிறைகுடம்

நினை கொப்பளிப்பது வாசனை

ஓடாது

அச்சாணியில்லாத் தேர் குடிப்பது

கூழ்

முச்சாணும் கழுதை கற்பூர

உள்ளளவும் பன்னீர்

தளம்பாது

1. சிறப்பு அறியா இயல்பு

_______________________________________________

2. உதவி செய்தவரை என்றும் மறவாதே

_______________________________________________

3. வீண்பெருமை காட்டுதல்.

_______________________________________________

4. அறிவின் அடக்கம்.

_______________________________________________

5. சிறிதின் பெருமை.

_______________________________________________

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வழிடமொழியில் மாற்றி எழுதுக.

ஒரு மன்னனும் ஒரு புலவரும் நல்ல நண்பர்கள். ஆனால், ஒருவரையொருவர் நேரில் கண்டதில்லை. மன்னன் இறக்கும் தறுவாயில், புலவரைக் காண விரும்பினான். புலவர் தன்னைக் காண வருவாரெனக் காத்திருந்தான். புலவரும் மன்னனைக் காணும் ஆவலுடன், தலைநகருக்குச் சென்றார். ஆனால், அவர் போவதற்குள் மன்னன் உயிர் பிரிந்துவிட்டது. அச்செய்தி கேட்ட புலவர் அக்கணமே உயிர்விட்டார். இருவரும் சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர்.

புள்ளிகள் 5

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தென்றல் வரவு
- ✸ தமிழர் வீரம்
- ✸ புலம்பெயர்நாடுகளும் தமிழ்க்கல்வியும்
- ✸ உலகப் பொருளாதார வீழ்ச்சியும் இன்றைய மக்களின் வாழ்க்கை நிலையும்

புள்ளிகள் 15